உ
சிவமயம்

வணக்கப் பாமாலை

ராய. சொ.

காரைக்குடி நகரச் சிவன்கோவில்

வெளியீடு : வ. பழ. சா. பழ. சா.
மேலைச்சிவபுரி.

உ

சிவமயம்

நூல் முகம்

காரைக்குடி நகரத்தாருக்குச் சொந்தமான, மீனாட்சி சுந்தரேசுவரருக்குத் தொண்டு செய்யும் பாக்கியத்தை, என்னுடைய முதுமைப் பருவத்தில், இந்த ஆண்டில் பெற்றேன். அவ் இறைபணியை மகிழ்ச்சியோடு ஆற்றி வருகின்றேன்.

எண்ணற்ற அன்பர்களின் உதவிகொண்டு, என் சிறிய ஆற்றலுக்கு ஏற்பச் சிலநல்ல காரியங்கள் செய்திருக்கின்றேன். செய்ய வேண்டுவன எத்தனையோ பல இருக்கின்றன. அவற்றைத் திருவருள் கூட்டுவிக்கும் அளவுக்கு முற்றுவிப்பேன். சந்நிதிகளிலும், மண்டபங்களிலும், திருமுறைகள்-திருவிளையாடல் முதலியவற்றிலுள்ள தெய்வப் பாடல்களும், வேறுசில அன்பர்களின் பாடல்களும் நிறைய எழுதப்பெற்றிருக்கின்றன,

அவ் அரிய தமிழ்ப் பாடல்களை அச்சிட்டு வெளியிட்டால், பல கோவில்களுக்கும் பயன்படும் என அன்பர்கள் கருதினர்.

இப் பணியை அன்போடு ஏற்று, பேரார்வத்தோடு இதனை வெளியிடும் மெய் அன்பர், மேலைச்சிவபுரி சிவபூசைச் செல்வர் வ. பழ. சா. பழ. சுவாமிநாதன் செட்டியாராவார். அன்னருக்குச் சைவமும், தமிழும் பரம்பரைச் சொத்து. தனவணிக நாட்டிலேயே 'சன்மார்க்க சபை" என்ற பெயரால் நாம் அறிய, முதன் முதலில் சங்கம் கண்டு புகழ்பெற்ற பெரியார் வ. பழ. சா. பழநியப்பச் செட்டியாரவர்கள். அன்னார் மைந்தராகிய இந் நூலைக்கொணரும் சுவாமிநாதன் செட்டியார் அவர்களுக்கு உளங்கனிந்த நன்றி.

இவ் வணக்கப் பாமாலை, நாற்பத்தொரு பூக்களால் தொடுக்கப் பெற்றிருக்கின்றது. இக் கோவிலில் உள்ள சுவாமிகளின் பெயருக்குப் பொருத்தமான பாடல்கள் பலவற்றைக் காணலாம்.

நாயன்மார் அறுபத்து மூவர் என்று சொல்லுகின்றோம். நாயன்மார் வரிசையில் அறுபத்து மூன்று மூர்த்திகள் மட்டும் இருப்பதில்லை. எழுபத்து மூன்று மூர்த்திகளைக் காண்கின்றோம். எழுபத்து மூன்றில், தனி அடியார் அறுபத்து மூவர். தொகையடியாரைக் குறிக்கும் மூர்த்திகள் ஒன்பதின்மர். இந்த எழுபத்தி இரண்டு புராணங்களையும் தெய்வம் மணக்கும் செய்யுட்களால் பாடிய சேக்கிழார் அடிகள் ஒருவர். ஆக நாயன்மார் வரிசையில் பெரும்பாலான கோவில்களில் எழுபத்து மூன்று மூர்த்திகளைக் காணலாம். இவ் எழுபத்துமூவரில்தமிழ்ப்புலமைநிரம்பப்பெற்றுப் பாக்கள் பாடியவர் எண்மர் ஆவர். அவ் எண்மராவார்: சம்பந்தர், அப்பர், சுந்தரர், திருமூலர், காரைக்காலம்மையார், ஐயடிகள் காடவர்கோன், சேரமான் பெருமாள், சேக்கிழார் என்ப. எனவே, நாயன்மார் எழுந்தருளியிருக்கும் மண்டபத்தில், அவர்தம் பாடல்களில் ஒவ்வொன்று எழுதப் பெற்றிருக்கின்றன.

ஏனைய கோவில்கட்கும் உதவும் என்ற எண்ணத்தோடு, "வணக்கப் பாமாலை" ஆகிய இச்சிறுநூல் அச்சிட்டு, அன்பளிப்பாக வழங்கப் பெறுகிறது.

மீனுட்சி கொலு வீற்றிருக்கும் நவராத்திரிவிழாவில், மீனுட்சி திருக்கல்யாணக் கோலத்தோடு காட்சியளிக்கும் இன்று அவள் பாதப்போதில் இப் பாமாலையை வைத்து வணங்குகின்றேன்.

வேத முடிமேல் ஆனந்த
உருவாய் நிறைந்து விளையாடும்
மாதர் அரசே! முத்தநகை
மானே! இமய மடமயிலே!
மாதர் இமவான் தேவி,மணி
வடந்தோய் மார்பும் தடந்தோளும்
பாத மலர்சேப் புற,மிதித்து
விளையாட்டு அயரும் பரிசுஎன்னே!

பிலவ-புரட்டாதி-உ௯
காரைக்குடி.

ராய. சொ.

உ

சிவமயம்

பிள்ளையார்

திருவாக்கும்; செய்கருமம் கைகூட்டும்; செஞ்சொல்
பெருவாக்கும் பீடும் பெருக்கும்; — உருவாக்கும்;
ஆதலால் வானோரும் ஆனை முகத்தானைக்
காதலால் கூப்புவர்தம் கை.

— *கபிலர்.*

தண்டபாணி

முருகனே! செந்தி முதல்வனே! மாயோன்
மருகனே! ஈசன் மகனே! — ஒருகைமுகன்
தம்பியே! நின்உடைய தண்டைக்கால் எப்பொழுதும்
நம்பியே கைதொழுவேன் நான்.

— நக்கீரர்.

மீனாட்சி சுந்தரேசுவரர்

பால்நினைந்து ஊட்டும் தாயினும் சாலப்
பரிந்துநீ பாவியே னுடைய
ஊனினை உருக்கி, உள்ஒளி பெருக்கி,
உலப்புஇலா ஆனந்தம் ஆய
தேனினைச் சொரிந்து, புறம்புறம் திரிந்த
செல்வமே! சிவபெரு மானே!
யான்உனைத் தொடர்ந்து சிக்கெனப் பிடித்தேன்;
எங்குஎழுந்து அருளுவது இனியே.

— *மணிவாசகர்.*

மீனாட்சி சுந்தரேசுவரர்

சடைமறைத்துக் கதிர்மகுடம் தரித்து,நறும்
    கொன்றைஅம்தார் தணந்து வேப்புந்
தொடைமுடித்து, விடநாகக் கலன்அகற்றி
    மாணிக்கச் சுடர்ப்பூண் ஏந்தி,
விடைநிறுத்திக் கயல்எடுத்து, வழுதிமரு-
    மகனாகி, மீன நோக்கின்
மடவரலை மணந்து,உலகம் முழுதுஆண்ட
    சுந்தரனை வணக்கம் செய்வாம்.

— பரஞ்சோதி.

மகாமண்டபம்

ஒளிவளர் விளக்கே! உலப்பிலா ஒன்றே!
உணர்வுசூழ் கடந்ததோர் உணர்வே!
தெளிவளர் பளிங்கின் திரள்மணிக் குன்றே!
சித்தத்துள் தித்திக்கும் தேனே!
அளிவளர் உள்ளத்து ஆனந்தக் கனியே!
அம்பலம் ஆடுஅரங் காக
வெளிவளர் தெய்வக் கூத்துஉகந் தாயைத்
தொண்டனேன் விளம்புமா விளம்பே.

— *திருமாளிகைத் தேவர், திருவிசைப்பா.*

மகாமண்டபம்

சொல்ஆண்ட சுருதிப் பொருள்சோ தித்த
தூய்மனத் தொண்டர்உள்ளீர் !
சில்ஆண் டிற்சிதை யுஞ்சில தேவர்
சிறுநெறி சேராமே,
வில்ஆண் டகன கத்திரள் மேரு
விடங்கன் விடைப்பாகன்
பல்லாண்டு என்னும் பதங்கடந் தானுக்கே
பல்லாண்டு கூறுதுமே.

— சேந்தனுர், திருப்பல்லாண்டு.

கூத்தப் பெருமான்

உலகெ லாம்உணர்ந்து
    ஓதற்கு அரியவன்
நிலவுஉ லாவிய
    நீர்மலி வேணியன்
அலகுஇல் சோதியன்
    அம்பலத்து ஆடுவான்
மலர்சி லம்புஅடி
    வாழ்த்தி வணங்குவாம்.

— சேக்கிழார்.

கூத்தப் பெருமான்

குனித்த புருவமும் கொவ்வைச்செவ்
　　வாயில் குமிண் சிரிப்பும்
பனித்த சடையும் பவளம்போல்
　　மேனியில் பால்வெண் நீறும்
இனித்தம் உடைய எடுத்தபொற்
　　பாதமும் காணப் பெற்றால்
மனித்தப் பிறவியும் வேண்டுவ
　　தே.இந்த மாநிலத்தே.

— அப்பர்.

சிவகாமி அம்மன்

பரந்தெழுந்த சமண்முதலாம்
பரசமய இருள்நீங்க,
சிரம்தழுவு சைவநெறித்
திருநீற்றின் ஒளிவிளங்க,
அரந்தைகெடப் புகலியர்கோன்
அமுதுசெயத் திருமுலைப்பால்
சுரந்துஅளித்த சிவகாம
சுந்தரிபூங் கழல்போற்றி.

— உமாபதிசிவம்.

மணிவாசகர்

பெருந்துறையில் சிவபெருமான் அருளுதலும்
　　பெருங்கருணைப் பெற்றி நோக்கி,
கரைந்துகரைந்து இருகண்ணீர் மழைவாரத்
　　துரியநிலை கடந்து போந்து,
திருந்துபெரும் சிவபோகக் கொழுந்தேறல்
　　வாய்மடுத்துத் தேக்கிச் செம்மாந்து,
இருந்துஅருளும் பெருங்கீர்த்தி வாதவூர்
　　அடிகள்அடி இணைகள் போற்றி.

— சிவஞானசுவாமி.

மீனாட்சி அம்பிகை

வேதன்,நெடு மால்,ஆதி விண்ணோடர்,
மண்ணோடர், விரத யோகர்,
மாதவர்யா வருங்காண, மணிமுறுவல்
சிறிதுஅ ரும்பி, மாடக்கூடல்
நாதன்,இரு திருக்கரம்தொட்டு அம்மியின்மேல்
வைத்தகயல் நாட்டச் செல்வி
பாதமலர், எழுபிறவிக் கடல்நீந்தும்
புணைஎன்பர்; பற்றி லாதோர்.

— பரஞ்சோதி.

மீனாட்சி அம்பிகை

சுரும்புமுரல் கடிமலர்ப்பூங் குழல்போற்றி!
உத்தரியத் தொடித்தோள் போற்றி!
கரும்புருவச் சிலைபோற்றி! கவுணியர்க்குப்
பால்சுரந்த கலசம் போற்றி!
இரும்புமனம் குழைத்துஎன்னை எடுத்துஆண்ட
அங்கயற்கண் எம்பிராட்டி
அரும்பும்இள நகைபோற்றி! ஆரணநூ
புரம்சிலம்பும் அடிகள் போற்றி!

— பரஞ்சோதி.

பள்ளி அறை

இன்னிசையாழ் தும்புருநா ரதர்கள் பாட
இயம்பதினெட் டும்பொலிய, இமையோர் வாழ்த்த,
பன்னியர்பல் லாண்டுஇசைப்ப, முனிவர் போற்ற,
பவுரிமுறை நடிப்பஅரம் பயர்கள், தீர்த்தக்
கன்னியர்சா மரம்புரட்ட, நந்தி தேவர்
கைப்பிரம்பு கொண்டுஒதுக்க, கவின்செய் வாவி
மின்னியல்வெண் மணிகொழிக்கும் காரைமேவும்
மீனாட்சி சுந்தரரே! ஆடீர் ஊசல்.

— சொக்கலிங்கஐயா.

தென்முகக் கடவுள்

கல்லாலின் புடைஅமர்ந்து நான்மறைஆறு
அங்கம்முதல் கற்ற கேள்வி
வல்லார்கள் நால்வருக்கும் வாக்குஇறந்த
பூரணமாய் மறைக்கு அப்பாலாய்
எல்லாமாய் அல்லதுமாய் இருந்ததனை
இருந்தபடி இருந்து காட்டி,
சொல்லாமல் சொன்னவரை நினையாமல்
நினைந்து,பவத் தொடக்கை வெல்வாம்

— பரஞ்சோதி.

சோமாஸ்கந்தர்

நம்க டம்பனைப் பெற்றவள் பங்கினன்
தென்க டம்பைத் திருக்கரக் கோயிலான்,
தன்க டன்அடி யேனையும் தாங்குதல் ;
என்க டன்பணி செய்து கிடப்பதே.

— அப்பர்.

விசுவேசர் - விசாலாட்சி

இசைபாடி நாடனைத்தும்
ஏற்றிப் போற்ற,
பசுபாசம் வாங்கிஅருள்
பரமன் ஆன
கசியாதார் மனத்தினையும்
கரைக்கும், காசி
விசுவேசர் விசாலாட்சி
விரைத்தாள் போற்றி.

— *ராய. சொ.*

சுந்தரப் பிள்ளையார்

ஓத வினைஅகலும் ;
ஓங்கு புகழ்பெருகும் ;
காதல் பொருள்அனைத்தும்
கைகூடும் ; — சீதப்
பனிக்கோட்டு மால்வரைமேல்
பாரதப்போர் தீட்டும்
தனிக்கோட்டு வாரணத்தின் தாள்.

— பெருந்தேவனார்.

அண்ணுமலையார்

விண்ணுளும் தேவர்க்கும் மேலாய வேதியனை,
மண்ணுளும் மன்னவர்க்கும் மாண்பாகி நின்ருனை,
தண்ணுர் தமிழ்அளிக்கும் தண்பாண்டி நாட்டானை,
பெண்ணுளும் பாகனைப் பேணு பெருந்துறையில்
கண்ணுர் கழல்காட்டி நாயேனை ஆட்கொண்ட
அண்ணு மலையானைப் பாடுதுங்காண் அம்மானுய்!

— மணிவாசகர்.

நாயன்மார்

தத்து மூதெயில் மூன்றும் தழல்எழ
முத்து மூரல் முகிழ்த்த, நிராமய
சித்து மூர்த்திதன் தாள்இணை சேர்,அறு
பத்து மூவர் பதமலர் போற்றுவாம்.

-- சிவஞானசுவாமி.

நாயன்மார்

காதல் ஆகிக் கசிந்துகண் நீர்மல்கி
ஓது வார்தமை நன்நெறிக்கு உய்ப்பது;
வேதம் நான்கினும் மெய்ப்பொருள் ஆவது;
நாதன் நாமம் நமச்சி வாயவே.

— திருஞானசம்பந்தர்.

நாயன்மார்

இல்லக விளக்கது; இருள்கெ டுப்பது;
சொல்லக விளக்கது; சோதி உள்ளது;
பல்லக விளக்கது; பலரும் காண்பது;
நல்லக விளக்கது; நமச்சி வாயவே.

— திருநாவுக்கரசர்.

நாயன்மார்

எங்கேனும் இருந்துன்
அடியேன் உனை நினைந்தால்
அங்கேவந்து என்னோடும்
உடனாகி நின்றுஅருளி,
இங்கே என்வினையை
அறுத்திட்டு எனை ஆளும்
கங்கா நா யகனே!
கழிப்பாலை மேயானே.

— சுந்தரமூர்த்திகள்.

நாயன்மார்

பின்னை நின்று என்னே பிறவி பெறுவது ;
முன்னை நன் ருக முயல்தவம் செய்கிலர் ;
என்னை நன் ருக இறைவன் படைத்தனன்;
தன்னை நன் ருகத் தமிழ்ச்செய்யு மாறே.

— திருமூலர்.

நாயன்மார்

யானே தவம்உடையேன் ;
என்நெஞ்சே நல்நெஞ்சம் ;
யானே பிறப்பறுப்பான்
எண்ணினேன் ;—யானே,அக்
கைம்மா உரிபோர்த்த
கண்ணுதலான் வெண்ணீற்ற
அம்மானுக்கு ஆளாயி னேன்.

— காரைக்கால் அம்மையார்.

நாயன்மார்

ஓடுகின்ற நீர்மை
ஒழிதலுமே உற்ருரும்
கோடுகின்ருர் ; மூப்பும்
குறுகிற்று ;—நாடுகின்ற
நல்அச்சுஇற்று அம்பலமே
நண்ணுமுன் நல்நெஞ்சே
தில்லைச்சிற் றம்பலமே சேர்.

— ஐயடிகள் காடவர்கோன்.

நாயன்மார்

ஒழித்தேன் பிறவியை ; ஊர்ந்தேன்
உவகையை ; ஓங்கிற்று உள்ளம் ;
இழித்தேன் ; உடம்பினை ; ஏலேன்
பிறரிடை ; இம்மனையும்
பழித்தேன் ; பழியே விளைக்கும்பஞ்
சேந்தியக் குஞ்சரமும்
தெழித்தேன் ; சிவனடி சேர்ந்தேன் ;
இனிமிகத் தெள்ளியனே.

— சேரமான் பெருமாள்.

நாயன்மார்

என்றும் இன்பம் பெருகும் இயல்பிஞேடு
ஒன்று காதலித்து உள்ளமும் ஓங்கிட,
மன்று ளார்அடி யார்அவர் வான்புகழ்
நின்றது எங்கும் நிலவி உலகெலாம்.

— சேக்கிழார்.

திருத்தொண்டர்

தந்தைதா ளொடும்பிறவித் தாள்எறிந்து
நிருத்தர்இரு தாளைச் சேர்ந்த
மைந்தர்தாள், வேதநெறி சைவநெறி
பக்திநெறி வழாது வாய்மெய்
சிந்தைதான் அரன்அடிக்கே செலுத்தினராய்ச்
சிவானுபவச் செல்வ ராகிப்
பந்தமாம் தொடக்குஅறுத்த திருத்தொண்டர்
தாள்பரவிப் பணிதல் செய்வாம்.

— பரஞ்சோதி.

திருத்தொண்டர்

பேய்அன்ன புறச்சமயப் பிணக்குநூல்
வழியனைத்தும் பிழையே அன்றி,
வாய்அன்மை தெளிந்து,சைவ சித்தாந்த
வழிதேறி, அதீத வாழ்வில்
போய்அண்மி, அஞ்செழுத்தும் திருநீறும்
கண்டிகையும் பொருளாக் கொண்ட
நாயன்மார் திருக்கூட்டம் பணிந்துஇறைஞ்சும்
பெரும்பேறு நான்பெற் றேனல்

— *சிவஞானசுவாமி.*

திருத்தொண்டர்

தில்லைவாழ் அந்தணரே
முதலாகச் சீர்படைத்த
தொல்லையதாம் திருத்தொண்டத்
தொகையடியார் பதம்போற்றி!
ஒல்லைஅவர் புராணகதை
உலகறிய விரித்துரைத்த
செல்வமலி குன்றத்தூர்ச்
சேக்கிழார் அடிபோற்றி!

— உமாபதிசிவம்.

நால்வர்

பூழியர்கோன் வெப்புஒழித்த
    புகலியர்கோன் கழல்போற்றி!
ஆழிமிசைக் கல்மிதப்பில்
    அணைந்தபிரான் அடிபோற்றி!
வாழிதிரு நாவலூர்
    வன்தொண்டர் பதம்போற்றி!
ஊழிமலி திருவாத
    வூரர்திருத் தாள்போற்றி!

— உமாபதி சிவம்.

முருகக் கடவுள்

எந்தா யும்எனக்கு அருள்தந் தையும்நீ,
சிந்தா குலம்ஆ னவைதீர்த்து அருள்வாய்!
கந்தா! கதிர்வே லவனே! உமையாள்
மைந்தா! குமரா! மறைநா யகனே!

— அருணகிரிநாதர்.

கொற்றவை

எடுத்த காரியம் யாவினும் வெற்றி,
எங்கு நோக்கினும் வெற்றி,மற் றுங்கே
விடுத்த வாய்மொழிக்கு எங்கணும் வெற்றி,
வேண்டி னேனுனக்கு அருளினள் காளி ;
தடுத்து நிற்பது தெய்வத மேனும்
சாரும் மானுடம் ஆயினும் அஃதைப்
படுத்து மாய்ப்பள் அருட்பெருங் காளி,
பாரில் வெற்றி எனக்குறு மாறே!

— *பாரதியார்.*

திருமகள்

கமலம் மேவு திருவே! — நின்மேல்
காதலாகி நின்றேன் ;
குமரி! நின்னை இங்கே,— பெற்றோர்
கோடி இன்பம் உற்றார் ;
அமரர் போல வாழ்வேன், — என்மேல்
அன்பு கொள்வை யாயின் ;
இமைய வெற்பின் மோத,—நின்மேல்
இசைகள் பாடி வாழ்வேன்.

— பாரதியார்.

கலைமகள்

நாடிப் புலங்கள் உழுவார்
கரமும், நயஉரைகள்
தேடிக் கொழிக்கும் கவிவாணர்
நாவும், செழுங்கருணை
ஓடிப் பெருகும் அறிவாளர்
நெஞ்சும், உவந்துநடம்
ஆடிக் களிக்கும் மயிலே! உன்
பாதம் அடைக்கலமே.

— தேசிகவிநாயகனார்.

சண்டேசர்

பொன்னங் கடுக்கை முடிவேய்ந்த
    புனிதற்கு அமைக்கும் பொருளன்றி,
மின்னும் கலனு டைகள்பிறவும்
    வேறு தனக்கென்று அமையாமே,
மன்னும் தலைவன் பூசனையின்
    மல்கும் பயனை, அடியார்கள்
துன்னும் படிபூ சனைகொள்ளும்
    தூயோன் அடித்தா மரைதொழுவாம்.

ஒன்பது கோள்

வேய்உறு தோளிபங்கன்; விடம்உண்ட கண்டன்;
மிகநல்ல வீணை தடவி,
மாசறு திங்கள்கங்கை முடிமேல் அணிந்து,என்
உளமே புகுந்த அதனால்,
ஞாயிறு திங்கள்செவ்வாய் புதன்வியாழம் வெள்ளி
சனிபாம்பு இரண்டும் உடனே
ஆசறு நல்லநல்ல; அவைநல்ல நல்ல;
அடியார் அவர்க்கு மிகவே.

— சம்பந்தர்.

வைரவர்

விரித்தபல் கதிர்கொள் சூலம்,
வெடிபடு தமரு கம்கை,
தரித்ததோர் கோல கால
பைரவன் ஆகி, வேழம்
உரித்து,உமை அஞ்சக் கண்டு
ஒண்திரு மணிவாய் விள்ள,
சிரித்துஅருள் செய்தார் சேறைச்
செந்நெறிச் செல்வனாரே.

— அப்பர்.

வாழ்த்து

வான்முகில் வழாது பெய்க!
　　மலிவளம் சுரக்க! மன்னன்
கோல்முறை அரசு செய்க!
　　குறைவு இலாது உயிர்கள் வாழ்க!
நான்மறை அறங்கள் ஓங்க!
　　நல்தவம் வேள்வி மல்க!
மேன்மைகொள் சைவநீதி
　　விளங்குக உலகம் எல்லாம்!

— கச்சி அப்பர்

வாழ்த்து

சீதமழை முகில் பொழிக! தேசமெலாம்
பயிர்விளைக! செல்வம் ஓங்க!
மாதர்குழாம் மக்கள்குழாம் மனைஅறங்கள்
உடன்பொலிந்து மலிந்து வாழ்க!
மேதகுசீர்ச் சைவநெறி வேதநெறி
தழைத்து ஓங்க! மேலும் மேலும்
பூதலமேல் சிவபெருமான் ஆலயங்கள்
பூசனைகள் பொலிக மாதோ!

— *திரிகூடராசப்பக் கவிராயர்.*

குருபூசை மடத்து அனுகூல விநாயகர்

கருதும்ஒரு மலமும்,இரு வினையும் மும்மா
யையும்அகலக் கழற்றி, நாளும்
ஒருவஅரிய சிவபோகச் செழுந்தேறல்
வாய்மடுப்பான் உள்ளம் கொண்டோம்;
பருமணிமா ளிகைக்காரைக் குடிவயங்கப்
பொலியும்அறு பத்து மூவர்
திருமடத்தில் வீற்றிருக்கும் அனுகூல
மழகளிற்றைச் சிந்திப் பாமால்.

— மகாவித்துவான் மீனாட்சிசுந்தரனார்.

அதிர்விடைக் கொடிஅங் கயற்கொடி யாக
அராக்கலன் பொற்கல னாக
பொதியவிழ் கடுக்கை வேம்பலர் ஆக
புலியதழ் பொலந்துகி லாக
மதிமுடி வைர மணிமுடி யாக
மறைகிடந்து அலம்பும்மா மதுரை
பதிஉறை சோம சுந்தரக் கடவுள்
பாண்டிய னாகிவீற் றிருந்தார்.

சௌத் இந்தியா பிரஸ், காரைக்குடி